பக்கங்கள் 15+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 08 வெள்ளிக்கிழமை 25.10.2024 | அதிர்வு 85

## முன்னணிக்கு ஆதரவாக சுவரொட்டி ஒட்டியவர் மின்சாரம் தாக்கி சாவு

### முல்லைத்தீவில் துயரம்

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் முத்துவிநாயகபுரம் பகுதியில் சுவரொட்டி ஒட்டும்போது மின்சாரம் 02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தமிழ் மக்களின் தீர்வு சார் நிலைப்பாட்டுக்கு எதிராக அமெரிக்கா செயற்படாது!

## கஜேந்திரகுமாரிடம் ஜூலி சங் உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

**வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அரசியல் தீர்வு குறித்து தமிழ் மக்கள் தமது வாக்குகள் மூலம் வெளிப்படுத்தும் நிலைப்பாட்டுக்குப் புறம்பாக தாம் ஒருபோதும் செயற்படமாட்டோம் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் அக்கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் உறுதியளித்தார்.**

வடக்கு மாகாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணம் மாவட்ட வேட்பாளர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள திண்ணை ஹோட்டலில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது தமிழ் மக்கள் விடயத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய 02 ▶



### கூட்டமைப்பாகச் செயற்பட்ட

## தமிழ்க் கட்சிகள் ஏன் பிரிந்து நிற்கின்றன?

### கஜேந்திரகுமாரிடம் வினவிய அமெரிக்கத் தூதுவர்

(எஸ்.நிதர்ஷன்)

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்ட தமிழ்க் கட்சிகள் ஏன் பிரிந்து நிற்கின்றன? இவர்களால் ஒற்றுமையாகச் செயற்பட முடியாதா? அதற்கான சாத்தியங்கள் இருக்கின்றனவா?”

– இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் 02 ▶



# கணவன் உயிரிழந்த சோகத்தில் மனைவி உயிர்மாய்க்க முயற்சி!

## யாழ். பருத்தித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் கணவன் உயிரிழந்த சோகத்தில் மனைவி தனது உயிரை மாய்க்க முற்பட்ட நிலையில் உறவினர்களால் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ். பருத்தித்துறையில் திருமணமாகி ஒரு வருடத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக நேற்று வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார். புலோலி தென்மேற்கு பகுதியைச் சேர்ந்த சிவனேஸ்வரன் சிறிராஜ் (வயது 26) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி குடும்பஸ்தருக்கு கடந்த 22 ஆம் திகதி உடல் சுகயீனம் ஏற்பட்டது. இந்நிலையில் உறவினர்கள் அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் அன்றைய தினமே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அவர் சேர்க்கப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், கணவனின் பிரிவைத் தாங்க முடியாமல் மனைவி பெருமளவான மாத்திரைகள் உட்கொண்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழ் மக்களின்...

அரசின் போக்கு தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அவர், இந்த அரசு தேசிய மக்கள் சக்தியாக அடையாளப்படுத்தப்படினும், அரசியல் ரீதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான சகல அதிகாரங்களும் மக்கள் விடுதலை முன்னணி வசமே இருக்கின்றன என்று சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் மற்றும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவினால் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்தை மேற்கோள்காட்டிய கஜேந்திரகுமார், இவ்வாறானதொரு பின்னணியில் இந்த அரசிடம் இருந்து முன்னேற்றகரமான நகர்வுகளை எதிர்பார்க்க முடியும் எனத் தாம் கருதவில்லை என்றும் குறிப்பிட்டார் .

அதேபோன்று எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் பற்றிய அமெரிக்கத் தூதுவரின் கேள்விக்குக் கஜேந்திரகுமார் பதிலளிக்கையில், "ஏற்கனவே நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தெற்கில் பதிவான மாற்றம், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் பதிவாகும். இருப்பினும் அந்த மாற்றம் தேசிய மக்கள் சக்திக்குச் சாதகமானதாக இருக்காது. மாறாக எமக்குச் சாதகமான, எம்மை நோக்கிய மாற்றமாகவே இருக்கும்." – என்று சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, "கடந்த காலங்களைப் போலன்றி, நாம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானதில் இருந்து சகல தமிழ்த் தேசிய கட்சிகளும் 'தேசியம்' என்ற கொள்கையையும், முழுமையான சமஷ்டி தீர்வையும் முன்னிறுத்தி செயற்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. எனவே, நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் ஒற்றையாட்சி மற்றும் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் என்பவற்றைப் புறக்கணித்து, முழுமையான சமஷ்டி தீர்வை சகலரும் வலியுறுத்தும் சாத்தியம் உருவாகும்." – என்றும் கஜேந்திரகுமார் குறிப்பிட்டார்.

அதுமாத்திரமன்றி இவ்வாறானதொரு சூழ்நிலை தோற்றம் பெறும் பட்சத்தில், அந்தக் கொள்கை மாற்றத்தை அமெரிக்கா அதன் கொள்கையில் உள்வாங்க வேண்டும் எனவும், அதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும் எனவும் அமெரிக்கத் தூதுவரிடம் கஜேந்திரகுமார் கேட்டுக்கொண்டார்.

அதனை ஏற்றுக்கொண்ட அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங், எதிர்வரும் தேர்தலில் அரசியல் தீர்வு குறித்து தமிழ் மக்கள் தமது வாக்குகள் மூலம் வெளிப்படுத்தும் நிலைப்பாட்டுக்குப் புறம்பாகத் தாம் ஒருபோதும் செயற்படமாட்டோம் என்றும் உறுதியளித்தார்.

### சுவரொட்டி ஒட்டியவர்...

தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முத்துவிநாயகபுரம், முத்தையன்கட்டு பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னிக்கு ஆதரவாக சுவரொட்டி ஒட்ட முற்பட்டவர் காணி வேலியில் இணைக்கப்பட்ட மின்சார இணைப்பால் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்த மின்சார வேலி காணி உரிமையாளரால் யானைகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்வதற்காகப் பொருத்தப்பட்டிருந்த வேளை மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

முத்துவிநாயகபுரம், முத்தையன்கட்டு – ஒட்டுசுட்டானைச் சேர்ந்த 45 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

குறித்த காணியின் உரிமையாளர் அனுமதி பெற்று மின்சார வேலி அமைத்தாரா என்பது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### தமிழ்க் கட்சிகள்...

ஜுலி சங், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த கஜேந்திரகுமார், "எங்களைப் பொறுத்தவரையில் ஒற்றையாட்சி மற்றும் 13 ஆவது திருத்தம் போன்ற விடயங்களால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிய வேண்டி வந்தது. அந்த நிலைப்பாட்டில் நாங்கள் தொடர்ந்தும் இறுக்கமாக இருந்து வருகின்றோம். ஆனால், மற்றக் கட்சிகள் ஏன் பிரிந்து நிற்கின்றன என்பது எங்களுக்கும் விளங்கவில்லை.

கொள்கையளவில் இவர்களுக்கிடையில் எந்தவித வேறுபாடுகளும் இல்லை. ஆனாலும், அவர்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளை அவர்களிடத்தேதான் நேரடியாகக் கேட்க வேண்டும்." – என்றார்.

# மக்களைச் சிறிதளவும் சிந்திக்கவே விடாது அரசியல் செய்யும் தமிழ்த் தேசியத் தரப்பு!

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் சந்திரகுமார் குற்றச்சாட்டு

**(கி.வசந்தன்)**

"தமிழ்த் தேசியம் சார்ந்த அனைவருமே மக்களைச் சிறிதளவும் சிந்திக்க விடாது அரசியலைச் செய்கின்றனர். மக்கள் பல்வேறு துன்பத்தில் உள்ள போதும் அவர்கள் பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர்."

– இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் செ.சந்திரகுமார் தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று வெள்ளிக் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடுகின்றேன். அரசியலுக்கு வருகின்ற அனைவருமே சொல்கின்றார்கள் மக்களுக்குச் சேவை செய்யப் போகின்றோம் என்று.

ஆனால், என்னைப் பொறுத்த வரை




கடந்த 14 வருடங்களாக வன்னி மாவட்டத்தில் உள்ள மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தொடக்கம் அன்றாப் பிரச்சனைகள் வரை நன்கு அறிந்தவன் நான். அந்தவகையில் தொடர்ச்சியாக எனது சேவையை அவர்களுக்காகச் செய்திருக்கின்றேன்.

அதன் அடிப்படையில் அந்தச் சேவையின் பலனாக எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. எனவே, எனது சேவைகளை மேலும் மேம்படுத்தும் நோக்குடன் இந்தத் தேர்தலில் இறங்கியிருக்கின்றேன்.

இங்கு தமிழ்த் தேசியம் சார்ந்த அனைவருமே மக்களைச் சிறிதளவும் சிந்திக்கவிடாது அரசியலைச் செய்கின்றனர். மக்கள் பல்வேறு துன்பத்தில் உளன்று கொண்டிருக்கின்றனர். ஆனால், அவர்களோ பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டு இருக்க வேண்டும் என்பதுவே அவர்களது அரசியலாக உள்ளது.

நாங்கள் அப்படியல்ல. எனவே, மக்களே சிந்தியுங்கள் இவருக்கு வாக்கைப் போடலாமா என்று பலமுறை சிந்தியுங்கள். மாற்றம் என்பது மக்கள் மத்தியில் இருந்தே வரவேண்டும். தொடர்ச்சியாக ஒருவரைத் தெரிவு செய்து விட்டு ஒன்றும் மாறவில்லை என்று சொல்வதும் முறையல்ல. எனவே, மக்களது சிந்தனை மாறவேண்டும். அதன்போதே அவர்களது வாழ்க்கையும் மாறும்." – என்றார்.



# வாகன விபத்தில் இருவர் மரணம்!

வாகன விபத்தில் இருவர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து பொல்கஹவெல – அலவ்வ வீதியில் நேற்று வியாழக் கிழமை இரவு இடம்பெற்றது.

அலவ்வயில் இருந்து பொல்கஹவெல நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் பொல்கஹவெல வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும், இருவரும் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

பொல்கஹவெல பிரதேசத்தைச் சேர்ந்த 45 மற்றும் 48 வயதுடைய நபர்களே உயிரிழந்தனர்.

விபத்தையடுத்து பாவூர்தியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொல்கஹவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ் மக்களின் அரசியல் கலாச்சாரம் மாற்றப்பட வேண்டியது காலத்தின் தேவை!

## சுயேச்சைக் குழு வேட்பாளர் சம்சோன் ஜெரோம்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

ஒரு முறை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் சாகும்வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும் என்னும் தமிழர்களின் சாபக் கேடான அரசியல் கலாச்சாரத்தை மாற்றி தகைமையும் திறமையும் உள்ள புதியவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும்.



இவ்வாறு நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் சுயேச்சைக் குழு கோடாரி சின்னத்தில் இலக்கம் 9 இல் போட்டியிடும் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த வேட்பாளர் சம்சோன் ஜெரோம் தெரிவித்தார்.

ஜெரோம் தன்னைப் பற்றிய அறிமுக நேர்காணலில் நேற்று (24) இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் சாம்சன் ஜெரோம் மன்னார் மாவட்டம் அடம்பன் நெடுங் கண்டல் பிரதேசத்தைச் சேர்ந்தவன். ஒரு சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். நான் திருமணம் முடித்திருப்பது பனங்கட்டி கொட்டு எனும் கிராமத்தில். இலங்கையில் எனது முதலாவது பட்டப்படிப்பை முடித்து இங்கிலாந்தில் எனது முதுமாணி பட்டத்தை நிறைவு செய்து இருக்கிறேன்.

நான் இலங்கையில் கடந்த 17 வருடங்களாக பல அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றியதோடு கடந்த பத்து வருடங்களாக அதே பணியை வெளிநாடுகளில் தொடர்ந்து கொண்டு தற்போது அரசியலில் பிரவேசித்திருக்கின்றேன்.

மக்கள் தான் கேட்டார்கள் நேர்மையானவர்கள், ஊழலற்றவர்கள் ,பேச்சுத் திறன் உள்ளவர்கள், ஆளுமை உள்ளவர்கள் துறை சார்ந்த அறிவு உள்ளவர்கள், கல்வி அறிவுள்ளவர்கள், மக்கள் பணியாற்றுவதில் அனுபவம் உள்ளவர்கள் மும்மொழி திறமை கொண்டவர்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்று விரும்பி கேட்டுக் கொண்டார்கள்.

இவை அனைத்தையும் கொண்டவனாகத்தான் நான் இருக்கிறேன். அந்த காரணத்துக்காக தான் என்னுடைய தொழிலை விட்டு நான் அரசியலுக்கு வந்திருக்கிறேன். அதே நேரம் மக்கள் என்னை வெற்றிபெறச் செய்வார்கள் என்னும் நம்பிக்கையும் என்னிடம் உள்ளது.

அதை விட இப்பொழுது தமிழ் மக்களின் அரசியலில் எவ்வாறான மாற்றம் வர வேண்டுமென்றால் அடிப்படை அரசியல் கலாச்சார மாற்றம் மாற்றத்துக்கான காலம் அதற்கு உரிய அத்திவாரங்களை போடவேண்டிய தேர்தலாகத் தான் நான் இந்தத் தேர்தலைப் பார்க்கிறேன்.

ஏன் என்று சொன்னால் இவ்வளவு காலமும் ஒருவர் நாடாளுமன்றத்துக்குச் சென்று விட்டால் அவர் சாகும்வரை நாடாளுமன்ற உறுப்பினராக தான் இருக்க வேண்டும் என்ற இந்த கலாச்சாரம் மாற வேண்டும்.

இந்த சிந்தனை மாற வேண்டும் அடுத்த தலைமுறையினருக்கு தேவையானவர்களை அடையாளம் கண்டு நேர்மையுடன் செயல்படுபவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் இது பிரதானமானது.

எனக்கென்று நல்ல தொழில் உள்ளது. தொழிலை வைத்து என் வாழ்வை அபிவிருத்தி செய்து கொள்ளக் கூடிய நிலைமையும் இருந்தது. அவை எல்லாவற்றையும் தூக்கி போட்டு விட்டு மக்களுக்கு உரிய என்னுடைய சேவையை அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அரசியல் பயணத்தில் நான் காலடி எடுத்து வைத்திருக்கிறேன்.

மக்களே உங்களுடைய ஆதரவுகளை என்னை போன்றவர்களுக்கு அளியுங்கள். எங்களின் வெற்றி உங்கள் வெற்றியாக அமையும்.- என்றார்.





# டெங்குக் கட்டுப்பாட்டுப் பணிகள் யாழ். மாநகர சுகாதாரப் பிரிவில்!

தற்போது தொடங்கியுள்ள பருவமழையை அடுத்து, சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரம் நேற்று ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து மூன்று நாள்களுக்கு இந்தச் செயற்பாடு இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சமன் பத்திரன மற்றும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் ஆகியோரின் வழிகாட்டலுக்கு அமைய தேசிய டெங்கு ஒழிப்புக் களப்பணி யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட வண்ணார்பண்ணை பகுதியில் நேற்று இடம்பெற்றது.

இதில் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் த. தவரூபன், யாழ். பிராந்திய தொற்று நோயியல் பிரிவு மருத்துவர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் டெங்குக் களப் பணியாளர்கள், இராணுவத்தினர், பொலிஸார், வண்ணார்பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கிருபன் மற்றும் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கு. பத்மகுமார் ஆகியோர் பங்குபற்றினர்.

இதன்போது, பொது மக்களுக்கு நுளம்பு பரவும் இடங்களை அழிப்பது தொடர்பாகவும் டெங்கு நோயில் இருந்து பாதுகாப்பது தொடர்பாகவும் சுகாதாரக் குழுவால் அறிவுறுத்தப்பட்டது.

# குணம்ஸ்
## சுப்பர் மார்க்கட்

GUNAAM'S SUPER MARKET

# Gunams super market super deal

**24, 25, 26/10/2024**

100 $ மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 4lb மைசூர் பருப்பு இலவசம்

Open until 10:00 PM.




more details CLICK

1145 Morningside Ave, Toronto, ON M1B 0A7

Contact : 416 283 9998




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## யதார்த்தத்தைப் பேசுக!

தமிழ்த் தரப்புகள் ஏன் பிரிந்து இருக்கின்றன? இவர்களால் ஒற்றுமையாகச் செயற்பட முடியாதா? அதற்கான சாத்தியங்கள் இருக்கின்றனவா?

- இப்படி எல்லாம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தமது ஆதங்கத்தைத் தன்னிடம் வெளிப்படுத்தி உள்ளார் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட வேட்பாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கின்றார். யாழ்ப்பாணம் வந்திருந்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் அம்மையார் தங்களைச் சந்தித்துப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார் என்றும் அச்சமயமே இவ்வாறு அவர் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உண்மைதான். தமிழர் தரப்புகள் - குறிப்பாக தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி நிற்கின்ற தமிழர் தரப்புகள் - தமக்குள் பிரிந்து, சின்னாபின்னமாகி, கன்னை கட்டி நிற்பது தமிழருக்கு ஒரு சாபக்கேடு. தமிழர் தரப்பு ஒற்றுமையாக - வலிமையான சக்தியாக - இருந்தால் மட்டுமே தன்னுடைய எதிர்கால சுபீட்சத்தை நோக்கி சற்றேனும் முன் நகர முடியும் என்பதுதான் யதார்த்தம். இது சம்பந்தப்பட்ட தரப்புகள் யாவற்றுக்கும் நன்கு தெரிந்த விடயம்.

தமிழர் தேசியத் தரப்புகளோடு தாங்கள் சற்றுத் தள்ளி, விலகி, பிரிந்து நிற்பதற்கான தங்கள் தரப்பு காரணத்தையும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளிப்படுத்தி இருக்கிறார்.

எங்களைப் பொறுத்த வரையில் ஒற்றையாட்சி மற்றும் 13ஆம் திருத்தம் என்ற விடயங்களில்தான் கூட்டமைப்பிலிருந்து பிரிய வேண்டி வந்தது, அவை தொடர்பில் தொடர்ந்தும் இறுக்கமாக இருந்து வருகிறோம் என்று அவர் கூறியிருக்கிறார்.

அப்படி அவர் கூறியது உண்மைதான். ஒற்றையாட்சியின் கீழான தீர்வு, சமஷ்டியை வலியுறுத்துதல், 13 ஆம் திருத்தம் ஆகியவை தொடர்பில் ஏனைய தமிழ் தேசிய தரப்புகளோடு ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே தமிழ் தேசிய மக்கள் முன்னணி விலகி நிற்கின்றது என்பது கடந்த 15 ஆண்டு கால தமிழர் அரசியலை நோக்கும் எவருக்கும் தெளிவாகத் தெரியும்.

கொள்கை ரீதியில் இது வலுவான - இணைக்கப்பட முடியாத- இடைவெளி என்பது உண்மைதான்.

ஆனாலும் இது நீடிப்பதற்கான காரணம் யாது என்பது நோக்கப்பட வேண்டும்.

இந்த விடயங்களில் கஜேந்திரகுமாரின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாட்டினின்றும் விலகி நின்று கருத்து கூறுபவர்கள் ஒரே விடயத்தைத்தான் சுட்டிக்காட்டுகிறார்கள்.

தாம் எடுத்துள்ள கொள்கை நிலைப்பாட்டின் யதார்த்தபூர்வ நிலைமையைப் புரிந்து கொள்ளாமல், வெறும் கொள்கைக் கோட்பாட்டில் அதிக அளவு பற்றி நிற்கின்றார் கஜேந்திரகுமார் என்பது அவர்களது கருத்து. தங்கள் கொள்கைக் கோட்பாட்டு நிலைப்பாட்டை நோக்கி நகர்வதற்கான - அதை அடைவதற்கான - காரிய சாத்தியமான - வழித் தடப் பாதையை மக்கள் முன்னணி இன்னும் வெளிப்படுத்தவில்லை. 15 ஆண்டுகளாக ஒரே கொள்கைக் கோட்பாட்டை வலிமையான கோசமாக முன்வைக்கின்றார்களே தவிர, அதை அடைவதற்கான காரிய சாத்தியமான வழிகள் பற்றி அவர்களிடமும் திட்டமில்லை. மக்களிடமும் நம்பிக்கை இல்லை.

அதே இலக்கைதான் ஒற்றையாட்சிக்கு வெளியே வந்து, சமஷ்டி தீர்வு, அதிகார பகிர்வு என்றெல்லாம் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் பேசினாலும், உடனடிக் காரிய சாத்தியமான விடயங்களை பற்றி அவர்கள் அதிகம் கரிசனை காட்டுகிறார்கள். அது காலத்தின் கட்டாயமும் கூட. அப்படி அவர்கள் கொதிநிலையில் உள்ள உடனடிப் பிரச்சினைகளுக்கான தீர்வு பற்றி அதிகம் கவனிப்பதால் அவர்கள் கொள்கைகளை விட்டுக் கொடுத்து, பதவி சுகத்துக்கு பின்னால் போகின்றார்கள் என மோசமாக விமர்சிக்கின்றார் கஜேந்திரகுமார்.

15 ஆண்டுகளாகியும் ஒரு சரியான வழித் தடத் திட்டத்தை முன் வைக்காமல் - முன்வைக்க வாய்ப்பே இல்லாமல் - வெறும் கொள்கைக் கோட்பாட்டை உறுதியாகப் பற்றி நிற்கின்றோம் என்ற பெயரில் நடு வீதிக்கு இனத்தை கொண்டு வந்து விட்டு விடுவார்களோ என்ற சந்தேகம் - அச்சம் - தமிழ் மக்களுக்கு உண்டு. அதனால் தான் கொள்கை கோட்பாட்டில் அதிகம் பிரபலாபிக்கும் தங்களை மக்கள் கவனத்தில் கொள்கின்றார்கள் இல்லை என்பதை தமிழ் தேசிய மக்கள் முன்னணி புரிந்து கொள்ள வேண்டும்.

யதார்த்தபூர்வமான - அரசியல் சாத்தியமான - தங்களால் தங்கள் ஆயுள் காலத்தில் இனத்துக்காக செய்து முடிக்க கூடியவற்றை கூறி, அதன்படி மக்களை வழிநடத்தி, அடுத்த கட்டத்திற்கு மக்களை நகர்த்துவது தான் சரியான பாதையாக இருக்கும்.

கடந்த காலத்தில் கொள்கைக் கோட்பாட்டை உறுதியாகப் பற்றி நின்றும் சாத்தியங்கள், அசாத்தியங்களை மதிப்பாய்ந்து, யதார்த்தங்களை கவனத்தில் கொள்ளாமல் நடந்தமையால் இனம் படித்த பாடத்திலிருந்து கற்றுணர்ந்து, உய்வது காலத்தின் கட்டாயமாகும்.




# சாரண ஆசிரியர்களுக்கு முதலுதவிப் பயிற்சி நெறி

(எம். எப். றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரண ஆசிரியர்களுக்கான முதலுதவி பயிற்சி நெறி மாவட்ட ஆணையாளர் எம். ஐ. உதுமாலெப்பை தலைமையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையின் கூட்ட மண்டபத்தில் நேற்று (24) இடம் பெற்ற இந்த நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றஹுமத்துல்லா, வைத்திய அத்தியட்சகர் ஐ.எம். ஜவாஹிர் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும் வைத்தியர்களான எஸ்.அகிலன், காதர், சாரண சங்கத்தின் போசகர் யூ.எல்.எம். ஹாசிம் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். சுமார் நூற்றுக்கு மேற்பட்ட சாரண ஆசிரியர்கள் இந்தச் செயலமர்வில் கலந்துகொண்டு முதலுதவி சம்பந்த மான விடயங்களை கற்றறிந்தனர்.












# மாணவர் தூதுவர் மாநாடு

(நூருல் ஹுதா உமர்)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வேலைத்திட்ட மாணவர் தூதுவர் மாநாடு காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணன் தலைமையில் காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் யூ.எல். அசாருதீன் மற்றும் காரைதீவு பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஜீ.ரேவதி ஆகியோரின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவஞானம் ஜெகராஜன் கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 4 கல்வி வலயங்களை சேர்ந்த மாணவ தூதுவர்கள் பதிவு செய்யப்பட்ட மாணவர்களும் அவர்களது ஆசிரியர்களும் என் 100 பேர்கள் கலந்து கொண்டனர். அத்தோடு இந்த நிகழ்வுக்குப் பொலிஸ் நிலைய அதிகாரிகள் வலயக் கல்வி, முறைசாரா கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் வளவாளர்களாகவும், ஒருங்கிணைப் பாளர்களாகவும் அம்பாறை மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் அம்பாறை, சம்மாந்துறை, நிந்தவூர் செயலக பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



# அட்டாளைச்சேனை வைத்தியசாலைக்கு நிதி!



(நூருல் ஹுதா உமர்)

அட்டாளைச்சேனை வைத்தியசாலையின் புதிய கட்டட அபிவிருத்தி தொடர்பில் விசேட கலந்துரையாடல் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் இடம் பெற்றது.

தொடர்ந்து அண்மையில் கட்டி முடிக்கப்பட்ட புதிய கட்டடத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது மாடிகளையும் அதன் லிப்ட் வசதிகளை ஏற்படுத்தி அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் விசேட கள விஜயமொன்றை மேற்கொண்டனர்.

பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம். மாஹிர், உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.இப்ஹாம் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் இந்த விஜயத்தில் இணைந்து கொண்டனர்.

# அம்பாறை தமிழ் இளைஞர்கள் சிந்திக்க வேண்டியது அவசியம்!

## ஊடக சந்திப்பில் சங்கு வேட்பாளர் லிங்கேஸ்வரன்

( வி.ரி.சகாதேவராஜா)

1995 ஆம் அண்டுக்குப் பின்னர் பிறந்த இளம் வாக்காளர்கள் இம்முறை தேசிய அரசியலின் பக்கம் இருப்பதாக கூறப்படுகிறது. இது ஏனைய மாவட்டங்களுக்கு அல்லது ஏனைய இனங்களுக்கு பொருத்தலாம்.ஆனால் அம்பாறை மாவட்ட தமிழ் இளம் வாக்காளர்களுக்கு ஒருபோதும் பொருந்தாது. இதனையிட்டு அவர்கள் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் அம்பாறை மாவட்ட வேட்பாளரும் கல்முனை ஐக்கிய வணிக சங்கத் தலைவரும் பாண்டிருப்பு அனைத்து ஆலயங்களின் ஒன்றிய நிர்வாகசபை உறுப்பினருமான கிருஷ்ணபிள்ளை லிங்கேஸ்வரன் தெரிவித்தார்.

அவரது ஊடகச் சந்திப்பு காரைதீவில் உள்ள அம்பாறை ஊடக அமையத்தில் நேற்று (24) வியாழக்கிழமை இடம் பெற்றது .

அங்கு அவர் மேலும் தெரிவிக் கையில்,

அம்பாறை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி ஒரு வேளை மூன்று ஆசனங்கள் எடுத்தாலும் அந்த அணியில் கேட்கும் தமிழர் ஒரு போதும் வரவே முடியாது. அப்படி வந்தாலும் அவரால் தமிழருக்காகக் குரல் கொடுக்கவும் முடியாது. அபிவிருத்தி செய்யவும் முடியாது. எனவே அவர்களுக்கு அளிக்கும் உங்களது வாக்குகள் தமிழ் மகனை வர வைக்க போவதில்லை. மாறாக மாற்றின பிரதிநிதியைத்தான் வரவைக்கும் என்பதை தமிழ் வாலிப வாக்காளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே பொன்னான வாக்குகளை வீணாக்காமல் வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்து தமிழ் பிரதிநிதி வர ஒத்துழைப்பு நல்குங்கள்.

கடந்த முறை தமிழ் பிரதிநிதித்துவம் அம்பாறை மாவட்டத்தில் இழக்கப்பட்டதற்கு கருணா காரணம் இல்லை. கூட வாக்கெடுப்பதை விட குறைவாக வாக்கெடுத்து வாக்குகளை பிரிப்பவன் தான் அதற்கு காரணமாக இருக்க முடியும்.



அப்படிப் பார்த்தால் 1994 ஆம் ஆண்டில் மாவை சேனாதிராசா இங்கு வந்து பிரதிநிதித்துவத்தை இழக்கச் செய்தார். இதனை தமிழரசுக் கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டும் .

நாங்கள் திருகோணமலை மாவட்டத்திலே சம்பந்தன் பிறந்த நகர் என்பதால் அங்கு வீட்டுக்கு விட்டுக் கொடுத்தோம். ஆனால் அம்பாறை மாவட்டத்தில் அவர்கள் தேவையற்ற சாட்டுகளை சொல்லி ஒற்றுமையில் இருந்து தவறி விட்டார்கள். அதன் விளைவாக நாங்கள் சங்குச் சின்னத்தில் கேட்க நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

கடந்த காலங்களில் இந் தமிழரசுக் கட்சி அம்பாறை மாவட்ட தமிழர்களுக்கு செய்த துரோகம் கொஞ்சம் நெஞ்சம் இல்லை.

2015இல் கிழக்கு மாகாண சபையை தாரை வார்த்து கொடுத்தது. 2019 இல் நாம் உண்ணாவிரதம் இருந்த போது எத்தனையோ பொன்னான வாய்ப்புகள் இருந்தும் கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை வேண்டும் என்று கிடப்பில் போட்டது.

இவை எல்லாம் வரலாற்றில் அழிக்க முடியாத துரோகங்கள். இன்று அவர்கள் புனிதர்களாக வலம் வருவதாக கூறுகிறார்கள் .

புதிய அரசு ஊழலை இல்லாத ஒழிக்க வேண்டும் என்று செயற்பட்டு வருகின்றது. அதைத்தான் நானும் விரும்புகிறேன்.

சட்டம் அதன் கடமையை செய்கின்றது. நேற்று ஜோன்சன் பெர்ணான்டோ கைது செய்யப்பட்டார். பிள்ளையான் 588 கோடி ஊழல் செய்ததாக கூறப்படுகிறது .தமிழ் மக்களுக்கு குறிப்பாக கல்முனை தமிழர்களுக்கு துரோகம் செய்தவர் வியாழேந்திரன். அவர் பெரிய ஊழல்வாதி. 3 வருடத்தில் பாரிய சொத்து சேர்த்தவர். எல்லாம் சட்டத்தின் முன்னிறுத்தப்படும் காலம் தொலைவில் இல்லை.

எனவே கடந்த காலங்களிலே 2500 இற்கும் குறைவான வாக்குகளை பெற்று மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களை அல்லது அந்த கட்சிகளை நீங்கள் அடியோடு மறந்து விடுங்கள். அவர்களை இம்முறை நிராகரியுங்கள்.

நீங்கள் விரும்பினால் சங்குக்கு வாக்களியுங்கள் அல்லது வீட்டுக்கு வாக்களியுங்கள்.

ஒருவேளை அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் இழக்கப்படுமாக இருந்தால் அதற்கு காரணம் எந்த அணி மிகக்கூடுதலான வாக்குகளை பெறுகின்ற அல்லது வெற்றி பெறுகின்ற அணியை விட ஒரு வாக்குத் தானும் குறைவாக எடுக்கின்றதோ அந்த அணிதான் அதனை பொறுப்பெடுக்க வேண்டும். அது வீடாக இருக்கலாம் சங்காக இருக்கலாம். சங்கு என்றால் முதலில் அந்தப் பொறுப்பை கிருஷ்ணபிள்ளை லிங்கேஸ்வரனாகிய நான் ஏற்றுக் கொள்வேன். – என்றார்.







# ஆசிரியர் தினமும் மாணவர் கௌரவிப்பும்

(எம். எப். றிபாஸ்)

பாலமுனை அல் ஹிக்மா வித்தியாலயத்தில் ஆசிரியர் தினமும் மாணவர் கௌரவிப்பும் இடம்பெற்றன.

பழைய மாணவர்கள் அமைப்பு, ஹிக்மா பாடசாலை சமூகம் இணைந்து பாடசாலை அதிபர் எஸ்.ஏ.ஜஸாஹிர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்வி பணிப்பாளர் ஏ.எல்.அப்துல் மஜீத் பிரதம அதிதியாகவும், பாடசாலைகளின் அதிபர்கள், ஓய்வு நிலை அதிபர்கள் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

க.பொ.த. சாதாரண பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் நிகழ்வில் அதிதிகளால் நினைவுச் சின்னங்களும், பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



# தேர்தல் காலங்களில் மாத்திரம் வரும் பரசூட் வேட்பாளர்களை நம்பவேண்டாம்

## நுவரெலியா வேட்பாளர் ராமேஷ்வரன் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

தேர்தல் காலங்களில் மாத்திரம் நுவரெலியா மாவட்டத்துக்கு வரும் பரசூட் வேட்பாளர்களை நம்ப வேண்டாம். வாக்குகளை சிதறடித்து தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்வதற்கு வந்துள்ள சில சுயேச்சைக் குழுக்கள் தொடர்பிலும் மக்கள் விழிப்பாகவே இருக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.

தலவாக்கலை பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது,



எனது 20 வருடகால அரசியலில் மலையக மக்களுக்கு நிறைய சேவைகளை செய்துள்ளேன். மக்களுக்கு சேவைகளை வழங்குவதே காங்கிரஸின் பிரதான நோக்கம். எமது பொதுச் செயலாளரும் அமைச்சரும் குறுகிய காலப் பகுதிக்குள் பல சேவைகளை செய்துள்ளார். நாம் மக்களுடன் நிற்பதால்தான் எல்லா தேர்தல்களிலும் எம்மை வெற்றிபெற செய்துள்ளனர்.

நுவரெலியா மாவட்டமென்பது மலையக மக்களின் அரசியல் இருப்பாகும். அங்கு தமிழ்ப் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். சுயேச்சையாக பலர் போட்டியிடுகின்றனர். அவர்கள் வெற்றி பெற்றால் மகிழ்ச்சிதான். ஆனால் வாக்குகளை சிதறடிப்பதே சிலரது நோக்கமாக உள்ளது. மேலும் சிலர் தேர்தல் காலங்களில் மாத்திரம் நுவரெலியாவுக்கு வருகின்றனர்.

தேர்தல் முடிந்ததும் காணாமல்போய் விடுவார்கள். ஆனால் நாம் தோட்டத்தில் மக்களோடு மக்களாக வாழ்கின்றோம். எனவே, எமது மக்கள் எம்மை ஆதரிப்பார்கள் என முழுமையாக நம்புகின்றோம்.

மலையக மக்களுக்குக் காங்கிரஸ் எதையும் செய்யவில்லை எனக் கூறப்படுவது அப்பட்டமான பொய்யாகும். தோட்டப் பகுதிகளுக்கு வந்து பார்த்தால் தான் எமது அபிவிருத்தி திட்டங்கள் தெரியும். உரிமை மற்றும் அபிவிருத்தி அரசியல் இரண்டையும் செய்துள்ளோம். இது மக்களுக்கு தெரியும்.- என்றார்.

# தமிழர்களின் உரிமைகளுக்காக உள்ளார்ந்தமாகச் செயற்படுவேன்!

## அம்பாறை மாவட்ட தமிழ் மக்களிடம் வேட்பாளர் ஜெயசிறில் தெரிவிப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

தமிழர்களின் உரிமைகளுக்காக உள்ளார்ந்தமாகச் செயற்பட்டுள்ளேன். இனிவரும் காலங்களிலும் செயற்படுவேன். மக்கள் என்னை வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

இலங்கை தமிழரசுக் கட்சி வேட்பாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களிடம் கன்னி உரையை நிகழ்த்தும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாட்டை நிகழ்த்தி ஆசீர்வாதம் பெற்ற பின்னர் முதல் உரையை அவரது இல்லத்தில் நிகழ்த்தியிருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எதிர்வரும் நவம்பர் 14 இல் இடம் பெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழர் தம் தாய்க்கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தில் இலக்கம் 5 இல் நான் வேட்பாளராகப் போட்டியிடுகிறேன்.

நான் அம்பாறை மாவட்டத்தில் உள்ள அத்தனை தமிழ் கிராமங்களுக்கும் கடந்த காலங்களில் சென்று என்னால் முடிந்த சில வாழ்வாதார உதவிகளை செய்துள்ளேன். செய்தும் வருகின்றேன் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.



குறிப்பாக வெள்ளம், கொரோனா போன்ற அனர்த்த காலங்களில் எனது சேவையை முழுத் தமிழ் கிராமங்களுக்கும் முடிந்தவரை செய்துள்ளேன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆயுள்கால உறுப்பினரான நான் காரைதீவு பிரதேச சபையின் தவிசாளராக பணிபுரிந்த காலத்தில் காரைதீவு பிரதேச சபைக்குட்பட்ட பல அபிவிருத்திப்பணிகளை முன்னெடுத்திருந்தமை அனைவருக்கும் தெரியும்.

அதனைத்தாண்டி எனது உதிர உறவுகள் வதியும் எமது அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஏனைய தமிழ் ஊர்களிலும் போரால் பாதிக்கப்பட்ட, வறுமையால் பாதிப்புற்ற, அனர்த்தங்களால் நலிவுற்ற, ஏழை குடும்பங்களுக்காக முடிந்த உதவிகளை வழங்கும் ஏழைகளின் தோழனாக உள்ளேன்.

தமிழின உரிமைக்காக உள்ளார்ந்தமாக நடைபெற்ற அத்தனை அகிம்சை ரீதியிலான போராட்டங்களிலும் முன்னின்று உளப்பூர்வமாக பங்கேற்று உள்ளேன்.

தமிழ்த்தேசிய அரசியலில் என்றும் தடம்மாறாமல் பயணிக்கும் என்னை எதிர்வரும் பொதுத்தேர்தலில் மீண்டும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் ஒரு வெற்றி வேட்பாளராக நிறுத்தப்பட்ட என்னை வெற்றிபெறச் செய்யுங்கள். எனது சேவை மீண்டும் ஒரு அரசியல் அதிகாரத்துடன் தொடர உங்களின் வாக்குகளை உங்கள் தாய்க் கட்சியாம் இலங்கை தமிழரசுக் கட்சி சின்னமான வீட்டுக்கு நேரே புள்ளடி இடுங்கள்.- என்றார்.

# மக்கள் பங்களிப்புடனான கிராமிய அபிவிருத்தி திட்டம்

(சர்ஜூன் லாபீர்)

விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் 10 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் மூலம் செந்நெல்-02 கிராமத்தில் விவசாய உட்கட்டமைப்பு வசதிகள்,வாழ்வாதார மேம்பாட்டு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் குறித்த நிதியைப் பெற்றுக் கொள்ளுவதற்காக மக்கள் பங்களிப்புடனான கிராம அபிவிருத்தி திட்டம் ஒன்றைக் கிராம மக்களிடம் நேரடியாக கேட்டறிந்து கொள்ளுவதற்கான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கும் நிகழ்வு நேற்று (24) செந்நெல் கிராமத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா வழிகாட்டல் மற்றும் ஆகோசனைக்கு அமைய கிராம சேவகர் எஸ்.எம்.எம் அரபாத் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ சம்ஸத் ஆகியோர்களின் ஒழுங்கமைப்பின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் தலைமையில் இடம்பெற்றது.



இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளர் யூம்.எம் அஸ்லம் கலந்து கொண்டு மக்கள் பங்களிப்புடனான கிராமியவளத் திட்டத்தின் முக்கியத்துவம் அதன் நோக்கம் ஆகியவற்றை தெளிவுபடுத்தினார்.

இந்த நிகழ்வில் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்திஉத்தியோகத்தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பள்ளிவாசல் நிர்வாகிகள் கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த மக்கள் பங்களிப்புடனான கிராமிய அபிவிருத்தித் திட்டத்தை தயாரிக்கும் நிகழ்வுக்குப் பிரதம வளவாளராக அக்கரைப்பற்று பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எச்.ஜமாலி கலந்து கொண்டார்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றிக்காக திகாமடுல்லவில் ஒன்றிணைந்த மக்கள்

## சம்மந்துறை தொகுதியின் பிரதம அமைபபாளர் ஹசன் அலி

(எம். எப். றிபாஸ்.)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் மூவின மக்களும் ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றிக்காக எம்மோடு அணி திரண்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மந்துறை தொகுதியின் பிரதம அமைபபாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

சம்மாந்துறையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் பேசும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில்,

இந்த மாவட்ட மக்களுக்கு எவ்வித வேறுபாடுகளுமின்றித் தொகுதி



அமைப்பாளராக இருந்து கொண்டு பாரிய பணிகளையும் செய்துள்ளேன்.

முஸ்லிம்,தமிழ்,சிங்கள மக்களை சமமாக மதித்து சேவை செய்யக்கூடிய ஒருவராக இருப்பது மாத்திரமல்ல இம் மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் பிரச்சினைகளை நளாந்தம் அறிந்தவனாகவும் இருக்கின்றேன்.

ஐக்கிய மக்கள் சக்தி மூலம் இம் முறையும் போட்டியிடுகிறேன். இம் மாவட்ட மக்கள் இத்தேர்தலில் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் ஆட்சி அமைக்க இன்று எம்மோடு அணி திரண்டுள்ளனர்.

நாம் குறைந்த பட்சம் மூன்று ஆசனங்களையாவது பெற்றுக் கொள்வோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியூடாக சகல இன மக்களையும் அரவணைத்துக் கொண்டு பணிகளைச் செய்வதற்கு எனக்கொரு சந்தர்ப்பத்தை தாருங்கள் என மேலும் தெரிவித்தார்.



# தகுதியானவர்களை தெரிவு செய்து உங்கள் வாக்குகளை அளியுங்கள்

## மன்னார் வேட்பாளர் சட்டத்தரணி டினேசன்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

உறவுகள் தேர்தலில் போட்டியிடுகிறார்கள் என்பதற்காக உங்கள் வாக்குகளை சிதறடிக்காமல் வாக்களிக்கும் போது பொறுப்புடன் செயல்பட்டு தகுதியானவர்களுக்கு வாக்களித்து அவர்களை வெற்றி பெறச் செய்து நாடாளுமன்றம் அனுப்பி வையுங்கள்.

தமிழரசு கட்சியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் சட்டத்தரணி எஸ்.டினேசன் தெரிவித்தார்.

தலைமன்னாரில் நேற்று முன்தினம் (23) தமிழரசுக் கட்சியின் தேர்தல் அலுவலகம் திறந்து வைக்கப்பட்ட நிலையில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

நவம்பர் 14 ஆம் திகதி இடம் பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் பல கட்சிகள் பிரிந்து போட்டியிடுகின்றன. இதனால்



இம்முறை தமிழரசுக் கட்சியின் ஆசனம் குறைவடையும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

ஆகவே மக்கள் ஒன்று திரண்டு தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்.

எமது பிரதிநிதித்துவத்தை மக்கள் உறுதிப்படுத்த வேண்டும். மக்கள் பொறுப்புணர்வோடு செயற்பட்டு தகுதியானவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும்.

உறவுகள் தேர்தலில் போட்டியிடுகிறார்கள் என்பதற்காக உங்கள் வாக்குகளைச் சிதறடிக்காதீர்கள்.

வாக்களிக்கும் போது மக்கள் பொறுப்புடன் செயல்பட்டு தகுதியான வர்களை நாடாளுமன்றம் அனுப்பி வையுங்கள்.- என்றார்.

# நான் பார்த்த மிஹிந்தலை...!



கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ள கொண்டகலா இலங்கையின் பிரபலமான மலையேற்ற இடமாகும். சீகிரியா அளவில் இல்லாவிட்டலும் சென்றவர் மனதை கவரும் படியான சிறிய மலை. அதன் சுற்றியுள்ள அழகே பார்ப்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிடும். இதனை பார்க்க வேண்டுமானால் நீங்கள் தெரிந்துக்கொள்ள வேண்டிய மற்றொரு இடம்தான் லூல்கந்துர. லூல்கந்துர தேயிலை தோட்டம்.

சில உள்ளூர்வாசிகள் இந்த இடத்தை லூல்கந்துரா தேயிலை தோட்டம் என்று அழைக்கின்றனர் ஆகவே நான் சென்ற இடத்தை உங்கள் பார்வையில் கொண்டு வர ஆவலா?

கொண்டகல மற்றும் லூல்கந்துர இரண்டுமே ஒரே இடத்தில்தான் அமைந்துள்ளது. இந்த இரண்டு இடங்களும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் எல்லையில் உள்ளன. கண்டி நகரத்திலிருந்து கொண்டகலைக்கு சுமார் 32 கி.மீ. இது ரிகில்லகஸ்கடவில் இருந்து 20 கி.மீ. தொலைவிலும் ஹெவாஹெட்ட நகரத்திலிருந்து 12 கி.மீ. தொலைவிலும் உள்ளது. கொழும்பில் இருந்து இங்கு வரவேண்டுமெனில் அங்கிருந்து கிட்டத்தட்ட 150 கிலோ மீற்றர் பயணிக்க வேண்டும்.

லூல்கொண்டேரா தேயிலை தோட்டத்தின் நுழைவாயிலை கூகுள் மேப்ஸ் மூலம் எளிதாக அடையாளம் காண முடியும். கண்டியில் பயணத்தைத் தொடங்கினால கண்டிப்பாக முதலில் தெல்தோட்டை என்ற சிறிய நகரத்துக்குத்தான் வருவீர்கள். பின்னர் லூல்கந்துர தேயிலை தோட்டத்தை அடைய ரிகில்லகஸ்கட திசையை தேர்ந்தெடுக்க வேண்டும். சில கிலோ மீற்றர்களுக்குப் பின்னர் நீங்கள் லூல்கந்துர தேயிலை தோட்டத்தின் அதிகார பூர்வ நுழைவாயிலை அடைவீர்கள். ஆனால் அது உங்கள் இறுதி இலக்கு அல்ல. பாலத்துடன் கூடிய கோவிலைக் கண்டுபிடிக்கும் வரை அந்தச் சாலை வழியாகத்தான் செல்ல வேண்டும். பாலத்திலிருந்து வலதுபுறம் மலையை நோக்கி திரும்ப வேண்டும். இது குறைந்த அகலம் கொண்ட மோசமான சாலை. அதே சமயம் அந்தச் சாலையில் சில மீற்றர்கள் சென்றதும் ஒரு தடுப்புச்சுவர் காணப்படும். இப்போது உங்கள் பயணத்துக்கான டிக்கெட்டுகளை நீங்கள் வாங்க வேண்டும். உங்கள் வாகனத்துக்கான டிக்கெட்டுகளை மட்டும் எடுக்கச் சொல்வார்கள்.

டிக்கெட் பெற்ற பிறகு மலையை நோக்கி சில கிலோ மீற்றர்கள் நடக்க வேண்டும். இப்போது, நீங்கள் லூல்கந்துர தோட்டத்தின் மேல் வயல்களுக்குச் செல்கிறீர்கள்.

சுற்றியுள்ள தோற்றம் உங்களை ஆச்சரியப்படுத்தும். முதலில் சாலையின் கீழே ஒரு சிறிய தொட்டியைக் காண்பீர்கள். உங்கள் வாகனங்களை நிறுத்திவிட்டு அங்கு செல்ல வேண்டிய நேரம் இது. அதன் அழகுக்கோ பஞ்சமிருக்காது. பலவித மெல்லிசைகள் உங்கள் செவிப்பறையைத் தட்டும். தேவையென்றால் புகைப்படங்களை எடுப்பது நல்லது. தொட்டியின் நடுவில் கோடைகால குடிசை உள்ளது. மரப்பாலத்தில்தான் அங்கு செல்ல வேண்டும். இடம் முற்றிலும் அழகானது. எவ்வளவு நிமிடங்களை வேண்டுமானாலும் அந்த அழகை அனுபவிக்க காத்திருக்கலாம். ஆனால் இது உங்கள் இலக்கு அல்ல. அங்கிருந்து கொண்டகல மலை மற்றும் ஜேம்ஸ் டெய்லர் குடிசைக்கு 1.5 கி.மீ. சுற்றி செல்ல வேண்டும். அதற்கு லூல்கந்துர பற்றிய வரலாற்று அனுபவமும் அவசியமல்லவா.

இலங்கை வரலாற்றில் லூல்கந்துரவுக்கு பெறுமதியான இடம் உண்டு. 1867 இல் இலங்கையில் நிறுவப்பட்ட முதலாவது வர்த்தக தேயிலை தோட்டம் இதுவாகும். ஸ்கொட்லாந்தின் தோட்ட முகாமையாளரான ஜேம்ஸ் டெய்லர் இந்தப் பணியின் பின்னணியில் இருந்தவர். ஜேம்ஸ் டெய்லரின் முயற்சியின் பின்னர் இலங்கையின் மத்திய மலைநாட்டில் தேயிலை பரவலாக பரவி இன்று தீவின் முக்கிய ஏற்றுமதி, தோட்டப் பயிராக உருமாறியுள்ளது.

அதேபோல் லூல்கந்துரவில் முதல் வணிக தேயிலை தோட்டத்தை நிறுவிய பிறகு ஜேம்ஸ் டெய்லர் தனது வாழ்நாள் முழுவதும் அங்கேயே இருக்க முடிவு செய்தார். அவரது குடிசை தோட்டத்தின் மேல் பகுதியில் இருந்தது. கொண்டகல உச்சி மாநாட்டுக்குச் சற்று முன்னர் இந்தக் குடிசை உங்களைச் சந்திக்கும். ஆனால் இன்று அவருடைய குடிசையின் ஒரு சிறிய பகுதியை மட்டுமே பார்க்க முடிகிறது.

ஜேம்ஸ் டெய்லரின் கிணறும் உங்கள் பார்வைக்கு உள்ளது. குடிசையிலிருந்து வலதுபுறம் திரும்பினால் சிறிய பாதை கொண்டகலா மலையின் உச்சிக்கு அழைத்துச் செல்லும். ஆனால் இடதுபுறம் திரும்பினால் இன்னொரு முக்கியமான இடத்துக்குச் செல்வீர்கள்.

சிந்திக்கின்றீர்களா. அதுதான் உயரமான தேயிலை மரங்கள் அதிகம் உள்ள இடம். இப்பகுதி இலங்கையின் முதல் தேயிலை தோட்டமாக கருதப்படுகிறது. இப்போது அவர்கள் 150 வயதுக்கு மேற்பட்டவர்கள். இதன் விளைவாக அவை உயரமான மரங்களாகத் தோன்றுகின்றன. இப்போது நீங்கள் மீண்டும் குடிசைக்கு வந்து கோண்டகலா மேல் வலதுபுறம் திரும்பலாம்.

சோர்ந்து விடாதீர்கள் இனித்தான் உங்கள் பயணமே ஆரம்பிக்கின்றது.

குடிசையிலிருந்து கொண்டகலையின் உச்சிக்கு சுமார் 500 மீற்றர் தொலைவில் உள்ளது. மலை யேறுவதும் எளிதானது. கொண்டகல உச்சியை அடைந்தவுடன் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். மேற்பகுதியில் அடிக்கடி பலத்த காற்று வீசுகிறது. நீங்கள் நீண்ட நேரம் அங்கு சுற்றி வரலாம். கொண்டகலா அதன் பெரிய கற்களால் மிகவும் பிரபலமானது. கற்களின் விளிம்பிற்குச் சென்றால் லூல்கந்துர தேயிலைத் தோட்டத்தின் அழகையும் கலஹா மற்றும் கண்டியை நோக்கிய பகுதிகளையும் காணலாம்.

கொண்டகலா மலையின் சிகரம் சில அற்புதமான புகைப்படங்களை எடுக்க முற்றிலும் அழகான இடமாகும். தும்பரா பள்ளத்தாக்கில் சில பழைய வீடுகள், நெல் வயல்கள், தேயிலைத் தோட்டங்கள் மற்றும் பிற நிலப்பரப்புகளை நீங்கள் அவதானிக்கலாம். புகழ்பெற்ற ஹந்தனா மலைத்தொடரை இங்கிருந்து எளிதாக அடையாளம் காணலாம்.

மிஹிந்தலையில் உணர்ந்த அழகை இந்த சுலபமான இடத்தில் மிகவும் ஆழமாக மனதை நிதானப்படுத்தும் அந்த நொடிகளை அனுபவிக்க நீங்களும் தயாரா ?

**கணேஸ்குமார் மதியந்தி,**
**ஊடகக்கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைகழகம்.**

# 2026 என்ற இலக்கினை நோக்கி முதல் அடியை எடுத்து வைப்போம்

## த.வெ.க. தொண்டர்களுக்கு விஜய் கடிதம்






"உச்சபட்ச அரசியல் ஒழுங்கோடு, உலகமே உற்று நோக்கிப் போற்றும் விதமாகக் கொண்டாடுவோம் நம் வெற்றிக் கொள்கைத் திருவிழாவை. மாநாட்டுக்கு வரும்போது பாதுகாப்பையும், கட்டுப்பாட்டையும் மனதில் நிறுத்தி, பத்திரமாக வாருங்கள். நம் கழகக் கொடியைக் கைகளிலும் மனங்களிலும் ஏந்தி வாருங்கள்."

– இவ்வாறு த.வெ.க. தொண்டர்களுக்கு அக்கட்சியின் தலைவர் விஜய் எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக தனது கட்சித் தொண்டர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், "நம் கழகத்தின் முதல் மாநில மாநாடான வெற்றிக் கொள்கைத் திருவிழாவுக்காக எழுதும் மூன்றாவது கடிதம் இது. மாநாடு நிகழப் போகும் தருணம், நம் மனம் மற்றும் களவளாகத்துக்கு வெகு அருகில் வந்து விட்டது. உங்கள் ஒவ்வொருவரையும் நேரில் சந்திக்கப் போகும் கணங்கள், நம்மிடையே இருக்கும் அன்பின் கனத்தை இன்னும் பலமடங்கு கூட்டப் போகின்றன. அதை வார்த்தைகளில் எப்படிச் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. உச்சபட்ச அரசியல் ஒழுங்கோடு, உலகமே உற்று நோக்கிப் போற்றும் விதமாகக் கொண்டாடுவோம் நம் வெற்றிக் கொள்கைத் திருவிழாவை.

அத்திருவிழாவைக் கொண்டாடுவதற்காக, பெருந்திரளாக அனைவரும் மாநாட்டுக்கு வரும்போது பாதுகாப்பையும், கட்டுப்பாட்டையும் மனதில் நிறுத்தி, பத்திரமாக வாருங்கள். நம் கழகக் கொடியைக் கைகளிலும் மனங்களிலும் ஏந்தி வாருங்கள். உங்கள் வருகைக்காக வி.சாலை எல்லையில், என் இரு கரங்களையும் விரித்தபடி, இதய வாசலைத் திறந்து வைத்துக் காத்திருப்பேன். வாருங்கள் மாநாட்டில் கூடுவோம்.

நம் தமிழ்நாட்டு மண்ணுக்கான வெற்றிக் கொள்கைகளைச் செயல்படுத்த உறுதிபூண்டு முழங்குவோம். 2026 என்ற இலக்கை நோக்கி, முதல் அடியை எடுத்து வைப்போம். வி.சாலை என்னும் வியூகச் சாலையில் சந்திப்போம், வெற்றி நிச்சயம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# பிரியங்கா வேட்புமனு தாக்கல் குடும்ப அரசியலின் வெற்றி

## பா.ஜ.க. விமர்சனம்

வயநாட்டில் பிரியங்கா காந்தியின் வேட்புமனு தாக்கல், குடும்ப அரசியலின் வெற்றியையும் தகுதியின் தோல்வியையும் காட்டுகிறது என பா.ஜ.க. விமர்சனம் செய்துள்ளது.

கேரள மாநிலம் வயநாடு மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் நவம்பர் 13 ஆம் திகதி நடைபெற உள்ளது. இங்கு காங்கிரஸ் சார்பில் கட்சியின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி வதேரா நேற்று முன்தினம் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

இதுகுறித்து பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் கவுரவ் பாட்டியா நேற்று டில்லியில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"வயநாட்டில் பிரியங்கா காந்தி வேட்புமனு தாக்கல் செய்துள்ளார். இது நேரு-காந்தி குடும்பத்தின் ஊழல் மற்றும் குடும்ப அரசியலின் வெற்றியையும் தகுதியின் தோல்வியையும் காட்டுகிறது.

பிரியங்கா காந்தி தனது தேர்தல் பிரமாண பத்திரத்தில் அறிவித்துள்ள சொத்துகள், அவரும் அவரது கணவர் ரொபர்ட் வதேராவும் வைத்திருக்கும் சொத்துகளை காட்டிலும் குறைவாக உள்ளது. இது நேரு-காந்தி குடும்பம் மற்றும் ராபர்ட் வதேரா செய்த ஊழல்களின் ஒப்புதல் வாக்குமூலமாக உள்ளது. காங்கிரஸ் கட்சி அளித்த பொறுப்புகளை அவர் நிறைவேற்றவில்லை. என்றாலும் அவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.



கிழக்கு உ.பி. காங்கிரஸ் பொறுப்பாளராக அவர் நியமிக்கப்பட்டார். அப்போது 80 மக்களவைத் தொகுதிகளில் காங்கிரஸ் ஒன்றில் மட்டுமே வெற்றி பெற்றது. என்றாலும் பிரியங்கா பதவி உயர்வு பெற்று, 2020 இல் உ.பி. முழுவதற்கும் கட்சியின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். 2022 இல் 403 சட்டப்பேரவை தொகுதிகளில் காங்கிரஸ் இரண்டில் மட்டுமே வெற்றி பெற்றது. ஆனாலும் அவருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டு, வயநாடு மக்களவை இடைத்தேர்தலில் போட்டியிட காங்கிரஸ் வாய்ப்பு வழங்கியுள்ளது. "– என்றார்.

# சீனாவுடனான உறவு மேம்படும் இந்திய வெளியுறவுத்துறை கருத்து



ரஷ்யாவின் கசான் நகரில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சி மாநாட்டுக்கு இடையே சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், பிரதமர் மோடி ஆகியோர் சந்தித்து பேசியது இருதரப்பு உறவை மேம்படுத்துவதில் மிக முக்கியமானது என சீன கூறியுள்ளது.

பிரிக்ஸ் அமைப்பின் 16 ஆவது உச்சி மாநாடு ரஷ்யாவின் கசான் நகரில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது. இந்த மாநாட்டில் பங்கேற்க சென்ற பிரதமர் மோடி, சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங்கை சந்தித்து இரு தரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு கல்வான் பள்ளத்தாக்கில் இரு நாட்டு வீரர்கள் இடையே நடைபெற்ற மோதல் காரணமாக இரு நாடுகள் இடையேயான உறவு பாதித்தது. அதன்பின் சுமார் 5 ஆண்டுகளுக்குப்பின் இரு தலைவர்களும் சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் பரஸ்பர நம்பிக்கை, பரஸ்பர மரியாதை, பரஸ்பர உணர்வு இரு நாட்டு உறவுகளின் அடிப்படையாக இருக்க வேண்டும் என்பதை பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

இந்த சந்திப்பில் இரு நாடுகள் இடையே லடாக் எல்லையில் ரோந்து செல்லும் ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்த சந்திப்பை தொடர்ந்து இரு நாடுகள் இடையேயான உறவை சுமூகமாக உயர் அதிகாரிகள் மட்டத்திலான பல்வேறு இருதரப்பு பேச்சுவார்த்தைகளை தொடர உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

இந்த சந்திப்பு குறித்து சீன வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் லின் ஜியான் குறிப்பிடுகையில்,

“இந்தியா - சீனா உறவுகளை மீண்டும் வளர்ச்சி பாதை நோக்கி கொண்டு செல்ல இருநாட்டு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். இந்தியா- சீன எல்லையில் அமைதி நிலவுவதை உறுதி செய்ய சிறப்பு பிரதிநிதிகள் அளவிலான பேச்சுவார்த்தையை நன்கு பயன்படுத்திக்கொள்ளவும் இரு தலைவர்களும் சம்மதித்தனர். இது மிக முக்கியமானது.

இந்தியாவுடன் இணைந்து செயலபட்டு, இருதரப்பு உத்தரவை புதிய உச்சத்துக்கு கொண்டு செல்ல சீனா தயார். இரு நாடுகள் இடையேயான தகவல் தொடர்பு, ஒத்துழைப்பு, பரஸ்பர நம்பிக்கையை மேம்படுத்தவும், வேறுபாடுகளை முறையாக கையாளவும் சீனா தயாராக உள்ளது.”- என்றார்.

இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் விக்ரம் மேஸ்திரி கூறுகையில்,

“ பரஸ்பர நலன், மரியாதையில் அக்கறை கொண்டு பக்குவத்துடன் செயல்பட்டால், இந்தியாவும், சீனாவும், அமைதியான, நிலையான மற்றும் பயன் அளிக்கக் கூடிய இருதரப்பு உறவுகளை பெற முடியும் என்பதை பிரதமர் மோடி, ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஆகியோர் வலியுறுத்தினர்.” என தெரிவித்தார்.



# பிலிப்பைன்ஸில் சீரற்ற காலநிலை; வெள்ளத்தில் சிக்கி 26 பேர் பலி!

பிலிப்பைன்ஸில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக 26 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகளில் சிக்குண்டே அவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 150,000 இற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பிலிபைன்ஸின் பல பகுதிகள் மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் பல பகுதிகளில் 100 கிலோ மீற்றருக்கும் அதிகூடிய வேகத்தில் காற்று வீசக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பக்கங்கள் 03

# கனடா முரசு

வெள்ளிக்கிழமை 25/10/2024

## கனடாவில் வட்டி வீதம் 0.5 வீதத்தால் குறைப்பு

கனடாவில் வட்டி வீதம் பூச்சியம் தசம் ஐந்து வீதத்தினால் குறைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய மத்திய வங்கியினால் இந்த அறிவிப்பு 02



# புலம்பெயர்வோர் எண்ணிக்கையை குறைக்கப்போகும் கனடா அரசு

**பல ஆண்டுகளில் முதல் முறையாக நாட்டிற்குள் அனுமதிக்கப்படும் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கையை கனடா கடுமையாகக் குறைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

**இது ஆட்சியில் தொடர்ந்தும் இருக்க முயற்சிக்கும் அரசாங்கத்தின் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கனடா 2024 இல் 485,000ஆக உள்ள நிரந்தர புலம்பெயர்வோர் எண்ணிக்கையை 2025 இல் 395,000 ஆக குறைக்கவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

மேலும், அந்த எண்ணிக்கை 2026இல் 380,000 ஆகவும் 2027 இல் 365,000 ஆகவும் குறைக்கும் என்று அந்த நாட்டின் அரசாங்க தரப்பை கோடிட்டு ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை 2025 இல் சுமார் 30,000 ஆக குறைக் கப்பட்டு 300,000 ஆக இருக்கும் என்றும் அந்த தரப்பு குறிப்பிட்டுள்ளது.

# நாயகராவில் காணாமல் போன நபரின் உடல் பாகங்கள் மீட்பு

கனடாவின் நயகரா பிராந்தியத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல் போன நபர் ஒருவரின் உடல் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அண்மையில் நாயகரா பிராந்தியத்தில் மனித உடல் பாகங்கள் மீட்கப்பட்டிருந்தன.

இந்த மனித எச்சங்கள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது இறந்த ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல் போன நபர் ஒருவருடைய உடல் பாகங்களே இவை என அடையாளம் காணப்பட்டுள்ளன.

கயில் புரொக்கல்பேங்க் என்ற நபரின் உடல் பாகங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. கடந்த 2022 ஆம் ஆண்டு மேற்படி நபர் காணாமல் போயிருந்தார்.

இந்த உடல் பாகங்கள் மீட்கப்பட்ட சம்பவம் காரணமாக பொது மக்களுக்கு எவ்வித பாதுகாப்பு அச்சுறுத்தலும் கிடையாது என நயகரா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




இந்த நபரின் மரணத்திற்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை.







## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வெளியிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக நாட்டின் பண வீக்க வீதம் வீழ்ச்சி அடைந்து செல்லும் நிலையை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான ஒரு பின்னணியில் வட்டி வீத குறைப்பு தொடர்பில் மத்திய வங்கி அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

பணவீக்கத்தை குறைப்பதனை விடவும் தற்பொழுது பணவீக்க நிலையை தளம்பாது பராமரிப்பதற்கு கூடுதல் கவனம் செலுத்தப்படும் என தெரிவித்துள்ளது.

இதற்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என கனடிய மத்திய வங்கியின் ஆளுநர் ரிப் மெக்கலம் தெரிவித்துள்ளார்.

பண வீக்கத்தை இரண்டு விதத்திற்கு குறைவாக பேணும் இலக்கினை கொண்டு கனடிய மத்திய வங்கி கொள்கைகளை வகுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தொடர்ந்து நான்காவது தடவையாக கனடாவில் வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# பிரிட்டிஷ் கொலம்பியாவில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் பொலிஸார் மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் ஹொகனான் பகுதியில் அமைந்துள்ள வைத்தியசாலைக்கு அருகாமையில் இந்த துப்பாக்கி சூடு சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வைத்தியசாலைக்கு அருகாமை யில் நபர் ஒருவர் ஆயுதத்துடன் சுற்றித் திரிவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதனை தொடர்ந்து சம்பவ இடத் திற்கு பொலிஸார் விரைந்துள்ளனர். இதன்போது மேற்படி நபரை கைது செய்வதற்கு பொலிஸார் முயற்சித் துள்ளனர்.

இந்த முயற்சியின் போது பொலி ஸார் நடத்திய துப்பாக்கி சூட்டில் அந்த நபர் படுகாயம் அடைந்துள்ளார்.

படுகாயம் அடைந்த நபர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளார். உயிரிழந்த நபர் பற்றிய விவரங்கள் எதனையும் பொலிஸார் இதுவரையில் வெளியிடவில்லை.

இந்த சம்பவம் தொடர்பில் விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தில் வேறு எவருக் கும் காயங்கள் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# கனடாவிலுள்ள சர்வதேச மாணவர்கள் உடல் ரீதியான வன்முறைக்கும் உட்படுத்தப்படுகின்றனர் என தகவல்

கனடாவிலுள்ள பிராம்ப்டன் நகரில் சர்வதேச மாணவர்கள் உடல் ரீதியான வன்முறைக்கும் மனிதக் கடத்தலுக்கும் உட்படுத்தப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில், பிராம்ப்டன் நகரின் மேயர் பாட்ரிக் பிரவுன் செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் போது குறிப் பிட்டுள்ளார்.

மேற்படி குற்றச்செயல்கள் அன்றாட வாழ்க்கையில் அனைவருக்கும் தெரியுமாறு நடக்கின்றன என்று அவர் கூறியுள்ளார்.

எனவே, இந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகாண விரைவில் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

பிராம்ப்டன் நகரில், குறிப்பாக வாடகை வீடுகளில் வசிக்கும் இளம் மாணவிகளே வன்முறை நடவடிக் கைகளுக்கு உட்படுத்தப்படுவதாக தெரவிக்கப்பட்டுள் ளது.

இது தொடர்பில் பல முறைகள் மாணவர்களால் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ள போதும் அரசு அதிகாரிகளால் இந்த விடயம் அதிகாரப்பூர்வமாக ஒப்புக்கொள்ளப்படுவது இதுவே முதன்முறை எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், பிராம்ப்டன் நகரிலுள்ள சர்வதேச மாணவர்கள் புலமைபரிசில்கள் மற்றும் குறைந்தளவு செலவிலான வசதிகள் மூலமாகவே இவ்வாறான நடவ டிக்கைகளுக்கு உள்வாங்கப்படுவதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

